# விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவனம்
# பேராதனைப் பல்கலைக்கழகம்
# வெற்றிடம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டப் பின்படிப்பு நிறுவனம் (PGIS) பின்வரும் பதவிக்காகத் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

விஞ்ஞானவியல் உதவியாளர் - தரம் II (நிரந்தரப் பதவி)

**SCIENTIFIC ASSISTANT**

**1. தகைமைகள்:**

i. தொடர்புடைய பாடத்தில்* சிறப்புப் பட்டம் / கௌரவப் பட்டப் பரீட்சையில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு)

அல்லது

ii. தொடர்புடைய பாடத்தில்* சிறப்புப் பட்டம் / கௌரவப் பட்டப் பரீட்சையில் இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு)

அல்லது

iii. தொடர்புடைய பாடத்தில்* BA/BSc சிறப்புப் பட்டம் / கௌரவப் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

iv. தொடர்புடைய பாடத்தில்* அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின்படிப்புத் தகைமையுடன் BA/BSc பொதுப் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

*கணனி விஞ்ஞானம் / கணனிப் பொறியியல் / தகவல் தொழில்நுட்பம் / விஞ்ஞானம் மற்றும் செயற்கை நுண்ணறிவு / இரசாயனவியல் / பௌதிகவியல்

**குறிப்பு:**

(அ) மேற்கூறிய (iv) இன் கீழ் தகுதியான விண்ணப்பதாரர் மேற்கூறிய (i) (ii) அல்லது (iii) இன் கீழ் எந்தவொரு விண்ணப்பதாரரும் தகுதிபெறவில்லையென்றால் மட்டுமே நியமனத்திற்குக் கவனத்திற் கொள்ளப்படலாம்.

(ஆ) மேற்கூறிய (iii) இன் கீழ் தகுதியான விண்ணப்பதாரர் மேற்கூறிய (i) அல்லது (ii) இன் கீழ் எந்தவொரு விண்ணப்பதாரரும் தகுதிபெறவில்லையென்றால் மட்டுமே நியமனத்திற்குக் கவனத்திற் கொள்ளப்படலாம்.

(இ) மேற்கூறிய (ii) இன் கீழ் தகுதியான விண்ணப்பதாரர் மேற்கூறிய (i) இன் கீழ் எந்தவொரு விண்ணப்பதாரரும் தகுதிபெறவில்லையென்றால் மட்டுமே நியமனத்திற்குக் கவனத்திற்கொள்ளப்படலாம்.

**2. பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் தொடர்புடைய தொழில்சார் தகைமைகள் மற்றும்/அல்லது அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:**

I. Cloud-based தரவு முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வு தளங்கள்

II. கணனி வலையமைப்பு நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

III. உயர் செயல்திறன் கணனி (HPC) கொத்தணி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

IV. செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகள்

V. முறைமை நிர்வாகம்

**3. சம்பளச் அளவு:**

[U-AS I (1)] - ரூ. 81,285 - 19 x 1,240 - 104,845 மாதாந்தம்

(மேலும் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் 02/2025 (i) மற்றும் ஏனைய தொடர்புடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) சுற்றுநிருபங்களின் பிரகாரம் பொருந்தக்கூடிய ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படும்)

**4. வயது:**

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**5. தெரிவு அளவுகோள்**

நேர்முகப் பரீட்சையின் மூலம்

**6. பொது நிபந்தனைகள்:**

**ஏனைய சலுகைகள்:**

I. சேமலாப நிதி மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்:

பணியாளர் மற்றும் வேலை வழங்குநரால் முறையே சம்பளத்தில் 10% மற்றும் 7% பல்கலைக்கழகங்களின் சேமலாப நிதியில் வரவு வைக்கப்படும். மேலும், சம்பளத்தில் 8% வேலை வழங்குநரால் ஓய்வூதிய நிதிக்கு வரவு வைக்கப்படும்.

- நியமனத் திகதியிலிருந்து கட்டாய ஓய்வு பெறும் வயது (கல்விசாரா ஊழியர்கள் - 60 வயது) வரை பல்கலைக்கழக முறைமையில் இருபது வருடங்கள் அல்லது அதற்கு மேல் சேவை செய்ய முடியாத ஊழியர்களுக்குப் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்யப்பட மாட்டாது, மேலும் அத்தகைய ஊழியர் பல்கலைக்கழகங்களின் ஓய்வூதிய நிதியில் உறுப்பினராக இருக்க மாட்டார்.

II. ஊழியர் நம்பிக்கை நிதி:

சம்பளத்தில் 3% வேலை வழங்குநரால் வரவு வைக்கப்படும்.

III. பணிக்கொடை:

பணிக்கொடை செலுத்துகையானது 1983 இன் 12ஆம் இலக்க பணிக்கொடைச் செலுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இருக்கும்.

**ஏனைய நிபந்தனைகள்:**

I. மேற்கூறிய பதவிக்கான விண்ணப்பங்கள் PGIS இணைதளத்திலிருந்து https://www.pgis.lk/ (அறிவிப்புகள் பிரிவின் கீழ்) பதிவிறக்கம் செய்யக்கூடிய பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

II. தகைமைகள் மற்றும் அனுபவம் / சேவை ஆகியவற்றை நிரூபிக்கும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பிரதிப் பதிவாளர், விஞ்ஞானப் பட்டப்படிப்பு நிறுவனம், த.பெ.இல: 25, பழைய கலஹா வீதி, பேராதனை என்ற முகவரிக்கு 2026 நவம்பர் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். குறித்த மாதிரிப் படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

III. கடித உறையின் இடது மேல் மூலையில் ''விஞ்ஞான உதவியாளர் பதவி தரம் II (நிரந்தரம்)'' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

IV. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனம்/நிறுவனங்கள், அரசாங்கத் திணைக்களங்கள், அரச தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக அனுப்ப வேண்டும். அந்தந்தத் துறைத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

V. இறுதித் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் / மேற்கூறிய தேவைகளுக்கு இணங்காததவை / முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

VI. விஞ்ஞானப் பட்டப் பின்படிப்பு நிறுவனம் விண்ணப்பதாரர்களை குறும் பட்டியலிடுவதற்கான (shortlist) உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

**பிரதிப் பதிவாளர்**
**விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவனம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**
**த.பெ.இல: 25, கலஹா வீதி,**
**பேராதனை**
**2026 ஒக்டோபர் 25**

Gazette.lk